Q.C - 138

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| | | |
|---|---|---|
| **Name of the Test:** | Departmental Test for Members of the Staff of the Tamil Nadu Khadi and Village Industries Board - First Paper on Gandhiji's Collected Works Volume - V (Tamil) (Tamil version only) (Without Books) | 158 |

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

Qc : 138

1. சர்வோதய தீர்மானத்தின்படி ஏற்றுக் கொண்ட நிர்மாண திட்டத்தின் மொத்த அம்சங்கள் எத்தனை?

(A) 20 (B) 21
(C) 22 (D) 23

2. "அல்லாஹீ அக்பர்" என்ற கோஷத்தை கேட்டதும் யாருக்கு உணர்ச்சி எழுகிறது என்று காந்திஜி கூறினார்?

(A) இந்துக்கள் (B) முஸ்லீம்கள்
(C) கிறிஸ்தவர்கள் (D) சீக்கியர்கள்

3. கதரே நமது விடுதலையின் சின்னம் என கூறியவர் யார்?

(A) வல்லபாய் பட்டேல் (B) காந்திஜி
(C) ஜவஹர்லால் நேரு (D) இராஜாஜி

4. ராட்டையின் மத்திய ஸ்தானம் என்று எதை காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) கிராமம் (B) மாகாணம்
(C) நகராட்சி (D) ஜில்லா

5. உத்தியோகங்களை விட்டு விட்டு நூற்க முற்பட வேண்டும் நான் சொல்லவில்லை என்பதை எந்த வாசகர்கள் அறிவதாக காந்திஜி கூறினார்?

(A) டைம்ஸ் ஆப் இந்தியா (B) எங் இந்தியா
(C) கதரின் தத்துவம் (D) கதர் பத்திரிக்கை

6. எந்த செல்வத்தை இந்தியா பெற்றிருப்பது போல வேறு எந்த நாடும் இல்லை என காந்திஜி தெரிவித்தார்?

(A) மனித சக்தி (B) கேந்திர சக்தி
(C) கதர் சக்தி (D) நூற்பு சக்தி

7. டாக்டர் பி.ஸி.ரே சாரியாகண்டியில் வர்த்தகம் என்று எதை குறிப்பிடுகிறார்?

(A) அரிசி கோதுமை விலை குறைவு (B) அரிசி சணல் விலை குறைவு
(C) அரிசி வெல்லம் விலை குறைவு (D) அரிசி பருப்பு விலை குறைவு

8. இந்தியா திரும்பியதும் காந்திஜி கதர் மறைந்தால் எது நிலைக்காது என்று கூறினார்?

(A) சுயராஜ்யம்
(B) சுதேசி
(C) சுதந்திரம்
(D) தியாகம்

9. தியாகத்திற்காக தினமும் குறைந்தபட்சம் எவ்வளவு நேரம் நூற்க வேண்டும் என காந்திஜி தெரிவித்தார்?

(A) 1/4 மணி நேரம்
(B) ஒரு மணி நேரம்
(C) 1/2 மணி நேரம்
(D) 2 மணி நேரம்

10. ராட்டையின் மூலம் நாம் சுயராஜ்யத்தை அடைந்து விட முடியும் என்று காந்திஜி எந்த ஆண்டு சொன்னார்?

(A) 1920
(B) 1921
(C) 1919
(D) 1918

11. கதர் எதன் சின்னமாக இருக்கிறது என புதிய திட்டத்தின்படி காந்திஜி தெரிவித்தார்?

(A) அடிமைத்தனம்
(B) பொருளாதார விடுதலை
(C) கிராம மக்கள் ராஜ்யம்
(D) மில் துணி

12. காந்திஜி எதனை பரவல் முறை என்று சொல்லமாட்டேன் என்று தெரிவித்தார்?

(A) வேட்டி ஏற்றுமதி
(B) பருத்தி இறக்குமதி
(C) நூல் ஏற்றுமதி
(D) பட்டு ஏற்றுமதி

13. நமக்கான துணியை தயாரிப்பதற்கான பருத்தியை மில்களுக்கு அனுப்பும் செயலை காந்தியடிகள் என்னவென்று கூறுகிறார்?

(A) லாபகரமானது
(B) வெட்க கேடானது
(C) சிக்கனமானது
(D) உழக்கமானது

14. மற்றவர்களுக்கு தீமையாக இருக்கக்கூடியவை எல்லாவற்றையும் துறந்து விட வேண்டும் என்பதன் பொருள் என்ன?

(A) சுய ராஜ்யம்
(B) சுதந்திரம்
(C) கதர் உணர்ச்சி
(D) சுதேசி

15. மில்கள் எதன் மூலம் கதரை விற்கலாம் என காந்திஜி கூறினார்?

(A) சங்கம்
(B) கடைகள்
(C) ஏஜெண்டுகள்
(D) மக்கள்

16. அரை மணி நேரமாவது "தம்மை இந்தியர்" என்று சொல்லிக் கொள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் என்ன செய்ய வேண்டும் என்று காந்திஜி கூறினார்?

(A) நெசவு செய்ய வேண்டும்
(B) கதர் விற்க வேண்டும்
(C) நூற்க வேண்டும்
(D) உழைக்க வேண்டும்

17. காந்திஜி நாம் மூளையையும் இதயத்தையும் எதில் ஈடுபடுத்த வேண்டும் என்று தெரிவித்தார்?

(A) நெசவு வேலை
(B) நூற்பு வேலை
(C) கதர் வேலை
(D) உற்பத்தி வேலை

18. காந்திஜி கதர் கடைகள் எல்லாம் விற்பனை கடைகளாக இருப்பதை விட்டுவிட்டு என்னவாக இருக்க வேண்டும் என கூறினார்?

(A) பயிற்சி நிலையம்
(B) சங்கம்
(C) நூற்போர் நிலையம்
(D) தறி நிலையம்

19. நெசவாளர் விசயத்திலும் ஏன் கட்டுப்பாட்டை கொண்டு வரக் கூடாது என காந்தியிடம் கேட்டவர் யார்?

(A) பாலாஜி ராவ்
(B) பியாரி லால்
(C) மதுசூதனன்
(D) இராஜாஜி

20. இறக்குமதி பொருள்களில் ரூ. 65 கோடிக்கு இறக்குமதி செய்த பொருள் எது என காந்திஜி தெரிவித்தார்?

(A) போலி பட்டு ஜவுளி
(B) சர்க்கரை
(C) உலோகப் பொருள்
(D) பருத்தி ஜவுளி

21. எது தங்கமயமாக பிரகாசிக்கும் சூரியனாகிறது என்று காந்திஜி கூறினார்?

(A) தறி
(B) தக்ளி
(C) ராட்டை
(D) இயந்திரம்

22. கிராம கைத் தொழில் என்னும் சூரிய மண்டலத்தில் சூரியனைப் போல் விளங்குவது எது என காந்திஜி கூறினார்?

(A) மில் துணி
(B) பட்டு துணி
(C) கதர்
(D) காடா துணி

23. வெகுநாள் உழைப்புக்கு பின் ஓய்வு எடுத்துக் கொள்ள உரிமை பெற்றவர் என யாரை காந்திஜி தெரிவித்தார்?

(A) பண்டித மாளவியாஜி
(B) அப்பாஸ் தயாப்ஜி
(C) விஜயராகவாச்சாரியார்
(D) ஸ்ரீ ஹரிதயாள பாபு

24. பம்பாய் மாகாணத்தில் கதரை என்ன என்று கூறுவதாக காந்திஜி சொன்னார்?

(A) காதி
(B) நூற்பு துணி
(C) நெய்த துணி
(D) பட்டு துணி

25. பரிசேயர்கள் என்ன இனத்தை சேர்ந்தவர்கள்?

(A) பார்சீகம்
(B) நீக்ரோ
(C) யூதர்
(D) சீக்கியர்

26. சாந்தத்தையும் நல்லெண்ணத்தையும் அன்பையும் எது தருவதாக காந்திஜி தெரிவித்தார்?

(A) ராட்டை சுற்றும் போது
(B) தறி செய்யும் போது
(C) கதர் விற்பனை
(D) பட்டு விற்பனை

27. கலந்தோடிய இரத்த அருவி என்று காந்தியடிகள் எதை குறிப்பிடுகிறார்?

(A) ஒத்துழையாமை இயக்கம்
(B) ஜாலியன் வாலாபாக் படுகொலை
(C) உப்பு சத்தியாகிரகம்
(D) தண்டி யாத்திரை

28. சுரண்டப்பட்டு வரும் நாடுகளில் அதிக கொடுமைக்குள்ளாயிருப்பது எந்த நாடு என காந்திஜி தெரிவித்துள்ளார்?

(A) இங்கிலாந்து
(B) அமெரிக்கா
(C) ஜப்பான்
(D) இந்தியா

29. "வாட்டி வாங்கிய வேலைக்கு" விலை என்று கூறியவர் யார்?

(A) பட்டாபி
(B) சங்காதரராவ்
(C) ஜோசப்
(D) அப்பாய் தயாப்ஜி

30. "நீயே தயாரித்த கதரைக்கட்டு இல்லையானால் வெளிநாட்டு துணியை கட்டு" என்ற தத்துவத்தை தெரிவித்தவர் யார்?

(A) மோதிலால் நேரு
(B) வல்லபாய் பட்டேல்
(C) ராஜாஜி
(D) காந்திஜி

31. கதர் பொருளாதாரத்தின் தத்துவம் என்ன?

(A) வாங்குபவர்கள் உஷார்
(B) வர்த்தக உலகம்
(C) மார்க்கெட்
(D) எல்லோருக்கும் நியாயம்

32. ராட்டை இருக்கிறது அதை நூற்க ஆரம்பித்தால் உங்களுக்கு விமோசனம் என்று யாரிடம் காந்திஜி கூறினார்?

(A) ஒழுங்கத்தில் வீழ்ந்த சகோதரிகள்
(B) காமவெறிக்கு பழியானவர்
(C) வீழ்ச்சியடைந்த மனிதவர்க்கம்
(D) அருமை சகோதரிகள்

33. வேலையில்லா கஷ்டம், அரைபட்டினி பிரச்சனையெல்லாம் எதை பொருத்தது என காந்திஜி கூறுகிறார்?

(A) சங்கம் ஒத்துழைப்பு
(B) கதர் வாங்கும் பொதுமக்கள் ஆதரவு
(C) நூற்போர் ஆதரவு
(D) நெசவு செய்வோர் ஆதரவு

34. எந்த துணி ஒவ்வொன்றும் பலமுள்ளதாகவும் நீடித்து உழைப்பதாகவும் இருக்க வேண்டும் என்று காந்திஜி தெரிவித்தார்?

(A) பட்டு
(B) கம்பளி
(C) கதர்
(D) காடா

35. இந்தியா விடுதலை பெற்று வேலை ஒன்றும் இல்லையென்றால் நான் இந்த மலை உச்சிக்கு சென்று அமர்ந்துவிடுவேன் என்று காந்திஜி எதனை குறிப்பிடுகிறார்?

(A) இமயமலை
(B) மேற்கு தொடர்ச்சி மலை
(C) கிழக்கு தொடர்ச்சி மலை
(D) ஆல்ப்ஸ் மலை

36. ஆடம்பரத்திற்கு அல்ல எளிமை சின்னம் கதர் என்பதை யார் கேட்டதற்கு காந்திஜி தெரிவித்தார்?

(A) சக்லத் வாலா
(B) டாக்டர் ராய்
(C) டாட்டர்
(D) பிர்லர்

37. ராட்டை தருமத்திற்கு எத்தனை வயதானது என காந்திஜி தெரிவித்தார்?

(A) 15 வயது
(B) 18 வயது
(C) 20 வயது
(D) 21 வயது

38. அரசாங்கத்தின் தலையீடு அதிகமில்லாமல் ஒழுங்காகவும், திறமையாகவும் நிர்வாகத்தை நடத்தி வரும் நாடு எந்த நாடு என்று காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) சோசலிசம்
(B) ஜனநாயகம்
(C) சர்வாதிகாரம்
(D) சுதந்திரம்

39. பர்தோலியில் ஒவ்வொரு வீட்டிலும் ராட்டை சுழன்றால்தான் நான் இதனை தொடங்குவேன் என்று காந்திஜி நிபந்தனை விதித்தார்?

(A) ஒத்துழையாமை இயக்கம்
(B) தண்டி யாத்திரை
(C) சுதேசி இயக்கம்
(D) சத்தியாகிரகம்

40. காந்தி கையொப்பம் போடும் இடத்தில் நானும் கையெழுத்திடுவேன் என கூறியவர் யார்?

(A) ஷௌகத்அலி
(B) லோகமான்யர்
(C) நேரு
(D) படேல்

41. அந்நிய துணி உறுதிமொழியில் காந்திஜி எதன் நிபந்தனையை ஏற்றுக் கொள்ள மில்களிடமிருந்து நூல், துணி வாங்கவும் விற்கவும் கூடாது என்றார்?

(A) காரிய கமிட்டி
(B) சங்கம்
(C) ஸ்தாபனம்
(D) காங்கிரஸ்

42. கதருக்கு பலமான ஆபத்தாக இருப்பவர் யார் என்று மகாத்மா தெரிவித்தார்?

(A) அத்தாட்சி பெற்ற கதர் வியாபாரி
(B) அத்தாட்சி பெறாத கதர் வியாபாரி
(C) ஏழ்மை நிலைமை
(D) அஹிம்சை

43. கல்பதேவி கதர் கடை எந்த மாநிலத்தில் உள்ளது?

(A) சென்னை
(B) கல்கத்தா
(C) வங்காளம்
(D) பம்பாய்

44. இந்திய தொழில்களை அழித்து பிரிட்டிஷ் தொழிலை எப்படி வளர்ப்பது என்பதை எந்த சபையினர் ஆராய்ந்தார்கள்?

(A) காமன்ஸ்
(B) ராமேல் சந்திரதர்
(C) வில்லியம் போல்ட்ஸ்
(D) வில்சன்

45. ஒரு தொழிலாளியின் தொழில் திறமை ஒரு முதலாளியின் கையில் உள்ள எதற்கு சமம் என்றார் காந்திஜி?

(A) பணம்
(B) திறமை
(C) புத்திசாலி
(D) மூலதனம்

46. கைத்தொழில், கதை, கல்வி, ஆரோக்கியம் அனைத்தும் திட்டத்தில் எந்த முறை எனப்படுகிறது யார்?

(A) புது கல்வி முறை
(B) கிராம சீர்திருத்தம்
(C) கைத்தொழிலும் கல்வியும்
(D) இயந்திர உற்பத்தி

47. பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்கள் கேட்பதெல்லாம் ஒரே கீதை தான் என்று எதை காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) காமதேனு
(B) சுதேசி
(C) சுயராஜ்யம்
(D) சத்தளிக்கும் உணவு

48. கிராமவாசிகளை சுரண்டப்படும் ஒரு வர்த்தக ஸ்தாபனம் என்று எதை காந்திஜி குறிப்பிடுகிறார்?

(A) பட்டணவாசி
(B) சந்தை
(C) நடுத்தர வர்க்கம்
(D) பணக்கார வர்க்கம்

49. காந்திஜி உறுதியும் உழைப்பும் இருந்தால் நூற்பு மற்றும் அதன் பூர்வாங்க வேலைகளையும் எவ்வளவு நாளில் கற்கலாம் என கூறினார்?

(A) ஒரு வாரத்தில்
(B) 3 நாளில்
(C) 10 நாளில்
(D) 6 நாளில்

50. கூலியில் செய்திருக்கும் அதிகரிப்பு முழுவதும் கதர் வாங்குவோரிடம் வசூலிக்கப்படவில்லை என்பதற்கு காந்திஜி உபயோகித்த சொல் எது?

(A) அதிகபட்சம்
(B) அதிக கூலி
(C) குறைந்தபட்சம்
(D) கூலி உயர்வு

51. ஊழியர்கள் கல்யாணம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று யார் வலியுறுத்தியதாக காந்திஜி கூறினார்?

(A) நேரு
(B) படேல்
(C) இராஜாஜி
(D) தாகூர்

52. "சமரச ஒப்பந்தம்" என்று காந்திஜி எதனை குறிப்பிடுகிறார்?

(A) ஒத்துழையாமை இயக்கம்
(B) தண்டியாத்திரை
(C) இர்வின் ஒப்பந்தம்
(D) வட்ட மேஜை மாநாடு

53. சர்க்கரையை விட வெல்லத்தில் அதிக உணவு சத்துள்ளது என்ற முடிவை யார் கண்டது என காந்திஜி கூறுகிறார்?

(A) வைத்தியர்கள்
(B) மருத்துவர்கள்
(C) சங்க உறுப்பினர்கள்
(D) ஸ்தாபனங்கள்

54. கோடிக்கணக்கான மக்களுக்கு கௌரவமான உழைப்பு அளிப்பதாக காந்திஜி எதை தெரிவித்தார்?

(A) நெசவு
(B) நூற்பு
(C) கதர்
(D) பட்டு

55. எந்த ஆண்டு அகில இந்திய நூற்போர் சங்கம் அமைக்க பெற்றது?

(A) 1925
(B) 1930
(C) 1922
(D) 1920

56. சர்க்கா மண்டல உறுப்பினர்கள் வருடத்திற்கு எத்தனை சிட்டம் கொடுப்பார்கள்?

(A) ஐந்து சிட்டம்
(B) எட்டு சிட்டம்
(C) ஆறு சிட்டம்
(D) பத்து சிட்டம்

57. அகிம்சையின் சின்னம் எது?

(A) தக்ளி
(B) தறி
(C) ராட்டை
(D) நூற்பு

58. காந்தியும் வல்லபாய் பட்டேலும் எங்கு கைது செய்யப்பட்டனர்?

(A) சென்னை
(B) பம்பாய்
(C) மதுரை
(D) குஜராத்

59. "நாகரிகம் ஒரு நோய்" அதற்கு நல்ல மருந்து தேவை என கூறியவர் யார்?

(A) எல்பின்ஸ்டன்
(B) சங்காதரராவ்
(C) கங்கா பெண்
(D) எட்வர்ட் கார்பெண்டர்

60. காந்திஜி நடராஜரைப் போல் காட்சியளித்ததை கேமரா இருந்தால் படம் பிடித்துவிடுவேன் என கூறியவர் யார்?

(A) சர்தார் வல்லபாய் படேல்
(B) வித்தல்பாய்
(C) சீத்தாராமையா
(D) ஜலபாய்

61. மகாத்மாகாந்தி தயாரித்த கதர் திட்டம் எந்த பத்திரிக்கை தலையங்கத்தில் வருமாறு குறிப்பிட்டார்?

(A) டைம்ஸ் ஆப் இந்தியா
(B) ஹிந்த் ஸ்வராஜ்
(C) வெல்பேர்
(D) ஹரிஜன்

62. சங்கத்திற்கு தோட்டமும் பங்களாவும் தந்தவர் யார்?

(A) ரங்கம் செட்டியார்
(B) முகம்மது அலி
(C) லட்சுமிபாய்
(D) சேத் ஜம்னுலால்

63. அரிசிக்கு அடுத்தபடியான பிரதான உணவுப் பொருள் என்று காந்திஜி எதனை தெரிவித்தார்?

(A) தானிய வகை
(B) பருப்பு வகை
(C) கோதுமை
(D) வரகு

64. புகையிலை பயிர் செய்ய அயல் நாட்டில் பயிற்சி பெற்று வர இம்பீரியல் புகையிலை கம்பெனி 2 மாணவர்களுக்கு உபகார சம்பளம் எவ்வளவு தர முன் வந்தது?

(A) 100 பவுன்
(B) 200 பவுன்
(C) 500 பவுன்
(D) 400 பவுன்

65. பஞ்சாபி நீளம் குறைவாக உடுத்துவதன் பெயர் என்ன?

(A) கச்சான்
(B) தக்காணி
(C) வங்காளி
(D) ஒத்னி

66. ராட்டை வாங்குகிறவர் பெயரையும் விலாசத்தையும் எங்கு பதிவு செய்ய வேண்டும்?

(A) காதி பந்தர்
(B) காதி வஸ்திராலயம்
(C) கதர் கடை
(D) காதி பவன்

67. "அலகாபாத் லீடர்" பத்திரிக்கையின் ஆசிரியர் யார்?

(A) ஜி. ராமச்சந்திரன்
(B) மகாதேவதேசாய்
(C) ஸ்ரீசிந்தாமணி
(D) ஸ்ரீ பரீமன்

68. அகில இந்திய நூற்போர் சங்கத்தின் ஊழியர்கள் சுமார் எவ்வளவு பேர்?

(A) சுமார் 2000
(B) சுமார் 3000
(C) சுமார் 4000
(D) சுமார் 5000

69. தேசங்களின் செல்வம் என்ற நூலை எழுதியவர் யார்?

(A) ஆடம் ஸ்மித்
(B) லோகமான்யர்
(C) நிம்வேர்ஸ்
(D) ஹென்றி டேவிட்

70. டாக்கா மஸ்லின் விட கலை அழகு அதிகமாக இருப்பது எது?

(A) பட்டு புடவை
(B) மில் துணி
(C) கம்பளி
(D) கதர்

71. இந்தியர் வருடத்திற்கு உபயோகிக்கும் துணி அளவு என்ன?

(A) 13 கெஜம்
(B) 10 கெஜம்
(C) 12 கெஜம்
(D) 8 கெஜம்

72. உபயோகமற்ற அலங்கார வேலைகளை விட்டொழிக்க காந்தி யாரிடம் கூறினார்?

(A) மதுரதாஸ்
(B) பிரேமா பஹன்
(C) பிரேய்னே
(D) பிர்லா

73. முனிசிபாலிடி வேலை தொடர்பாக காந்திஜி 1921 செப்டம்பர் 20ம் தேதி திருச்சிராப்பள்ளியிலிருந்து புறப்பட்டு எங்கு வந்து சேர்ந்தார்?

(A) மதுரை
(B) தஞ்சாவூர்
(C) ஸ்ரீரங்கம்
(D) திருப்பூர்

74. தக்ளிக்கு பதிலாக வந்த நூற்கும் சாதனம் எது?

(A) ராட்டை
(B) தறி
(C) நேபாளி தறி
(D) விசைத்தறி

75. காந்திஜிக்கும் அவரது தென்னாப்பிரிக்கா தோழரான ஸ்ரீகால்லென்பாக் என்பவருக்கும் தகராறு ஏற்படக் காரணமாக இருந்த பொருள் எது?

(A) பேனா
(B) கதர் ஆடை
(C) தூரதிருஷ்டி கண்ணாடி
(D) செருப்பு

76. செங்கிஸ்கான் மன்னன் எந்த நாட்டு வீரன்?

(A) சீனா
(B) சைபீரியா
(C) மங்கோலியா
(D) ஆசியா

77. 1930-31ல் ஜவுளி இறக்குமதியில் குறைந்த கெஜம் அளவு என்ன?

(A) 150 கோடி
(B) 160 கோடி
(C) 100 கோடி
(D) 75 கோடி

78. யாரை எடுத்துக்காட்டி காந்திஜி புதிய உலகத்தை சிருஷ்டி செய்வதல்ல என் நோக்கம் என தெரிவித்தார்?

(A) அகத்தியர்
(B) விசுவாமித்திரர்
(C) போகர்
(D) புலிப்பாணி

79. கதர் மனித வாழ்வின் எதை காட்டுவதாக காந்திஜி தெரிவித்தார்?

(A) உயர்வு
(B) தரம்
(C) மதிப்பு
(D) பணம்

80. ஒவ்வொரு கிராமத்திலும் என்ன இருக்க வேண்டும் என்பது காந்திஜி லட்சியம்?

(A) தறி
(B) தக்ளி
(C) ராட்டை
(D) இயந்திரம்

81. போலிக்கதர் மோசடியை கண்டுபிடிப்பது எச்செயலினால் அதிக கஷ்டமாகிறது?

(A) வெளுப்பதால்
(B) துவைப்பதால்
(C) நெய்வதால்
(D) நூற்பதால்

82. ஔரங்கசீப் தனக்கு வேண்டியவற்றுள் எதை தனக்கு தானே தயாரித்துக் கொண்டார்?

(A) குல்லாய்
(B) ஆடை
(C) உணவு
(D) காலணி

83. எதை ராட்டையின்றி பெறமுடியாது?

(A) அகிம்சை
(B) சுதேசி
(C) விடுதலை
(D) சுயராஜ்யம்

84. நூற்கும் ராட்டையின் பெருமையை குறித்து எந்த பத்திரிகை பிரசுரித்திருக்கிறது?

(A) இந்திய சோஷியல் ரிபார்மர்
(B) சர்வண்ட் ஆப் இந்தியா
(C) எங் இந்தியா
(D) மாடர்ன் ரெவியூ

85. பாமர மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பது?

(A) ராட்டை வேலை
(B) ரொட்டி
(C) வெல்லம் கொப்பரை
(D) மாவு மில்

86. ஏழ்மையை போக்கக் கூடியது எது?

(A) ராட்டை
(B) விவசாயம்
(C) கிராமத் தொழில்
(D) கைத்தொழில்

87. பம்பாயின் பிரபலமான குடும்பங்களைச் சேர்ந்த பெண்மணிகள் எந்த தொழிலை ஆரம்பித்தனர்?

(A) நூற்க

(B) கார் ஓட்ட

(C) விமானம் ஓட்ட

(D) நெசவு செய்திட

88. கதர் உற்பத்தி செய்வோரை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கு என்ன சங்கம் இருக்கிறது?

(A) அகில இந்திய நூற்போர் சங்கம்

(B) மத்திய இந்திய நூற்போர் சங்கம்

(C) கிராமிய மக்கள் நூற்போர் சங்கம்

(D) கதர் நூற்போர் சங்கம்

89. மகன்வாடியில் காந்திஜி தலைமையில் 11, 12, 13 தேதியில் நடந்த அகில நூற்போர் சங்கத்தின் நிர்வாக சபையில் எத்தனை முக்கியமான தீர்மானம் நிறைவேறியது?

(A) 5 தீர்மானங்கள்

(B) 8 தீர்மானங்கள்

(C) 2 தீர்மானங்கள்

(D) 6 தீர்மானங்கள்

90. எந்த துணி மீது கொண்டிருக்கும் மோகத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்?

(A) கதர்

(B) பாப்லின்

(C) மஸ்லின்

(D) பாலியஸ்டர்

91. இந்தியாவின் பருத்தி துணி உற்பத்தியை அழித்தது எந்த கம்பெனி?

(A) வடக்கத்திய கம்பெனி

(B) தெற்கத்திய கம்பெனி

(C) கிழக்கத்திய கம்பெனி

(D) மேற்கத்திய கம்பெனி

92. பூரண சுதேசியத்திற்கு தேவையானவை என்ன?

(A) ஒழுக்க வலிமை மக்களை ஒன்று திரட்டும் ஆற்றல் தன்னடக்கத்தின் இணையற்ற சக்தி

(B) சுதேசியை தவிர மற்ற வேலைகளை நிறுத்துவது

(C) குடிபழக்கமுள்ளவர்களை ஆண்மை பரிசுத்தத்திற்கு புத்துணர்ச்சியை உணர்ந்து கொள்வது

(D) அந்நிய துணியை சேகரிப்பதால் சட்ட மறுப்பு போராட்டம்

93. மகாத்மா பாவமான காரியமாக கருதுவது எதனை?

(A) ஆடம்பர ஆடை அணிவது

(B) அன்னிய துணிகள் மீது மோகம் கொள்வது

(C) நூற்கும் தொழிலை கைவிட்டு விடுவது

(D) பிறரை கஷ்டப்படுத்தி வேலை வாங்கி துணியை அணிவது

94. லோகமான்ய திலகர் பிறந்த இடம் எது?

(A) பீகார்

(B) ஒரிஸ்ஸா

(C) ரத்தினகிரி

(D) உத்திரபிரதேசம்

95. ஹிந்த் ஸ்வராஜ் என்ற நூலில் ராட்டை என்பதற்கு எந்த சொல்லை காந்திஜி உபயோகித்தார்?

(A) சுயராஜ்யம்

(B) அகிம்சை

(C) தறி

(D) கைத்தறி

96. அகில இந்திய நூற்போர் சங்கம் நூற்போர் கூலியை உயர்த்த முடிவு செய்த போது முதலில் ஆதரவு அளித்தது எது?

(A) மகாராஷ்டிரக்கிளை

(B) மாகாணம்

(C) கூட்டுறவு ஸ்தாபனம்

(D) கதர் ஸ்தாபனம்

97. உலகத்தின் பிதா யார்?

(A) விவசாயி

(B) நூற்போர்

(C) நெய்வோர்

(D) ஓட்டுநர்

98. எதை விருத்தி செய்து போதனை வகுப்புகளை விஸ்தரிக்க வேண்டும்?

(A) பயிற்சி நிலையங்களை

(B) கிராமங்களை

(C) கதர் விற்பனை நிலையங்களை

(D) நூற்போர் சங்கங்களை

99. 80 ஆம் நெம்பர் நூலில் தயாரான கதரை எந்த மாநிலம் வெளியில் அனுப்பியது?

(A) தமிழ்நாடு

(B) ஆந்திரா

(C) கர்நாடகா

(D) கேரளா

100. எந்த ஆண்டு தேசிய வாரத்தை சாபர்மதி ஆசிரமவாசிகள் இரவும் பகலும் இடைவிடாமல் நூல் நூற்றுக்கொண்டாடினார்?

(A) 1926

(B) 1925

(C) 1930

(D) 1932

---